ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கபிலர் பாடல்களில் மெய்ப்பாட்டியல் கொள்கைகள்

முனைவர் மா கார்த்திகேயன்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

mkarthikeyantamilpsg@gmail.com

38

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் தன் மனத்திலுள்ள கருத்துகளைப் பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்திய கருவியாக மொழி திகழ்கிறது. அம்மொழி தொடக்க காலத்தில் குறியீட்டு மொழியாக இருந்தது. மனதில் தோன்றும் கருத்துகளை மனிதன் குறியீடுகளின் மூலமாகவே பிறருக்கு உணர்த்தினான். குறியீடு, சைகை, உடல்மொழி எனக் கூறப்படுவன அனைத்தும் மெய்ப்பாடுகளேயாகும். குறியீட்டு மொழியிலிருந்து தோன்றியவையே பேச்சு மொழியும், வரிவடிவம் பெற்ற எழுத்துமொழியும் ஆகும். மொழியின் வளர்ச்சிப் படிநிலை குறியீடுகளிலிருந்து தொடங்குவதன் மூலம் மொழிக்கு அடிப்படையானது மெய்ப்பாடுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இம்மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கு உண்டான நிலைக்களன்களைத் தனித்த இயலாகப் பகுத்துத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அவ்வகையில் தொல்காப்பியர் கூறும் எண்வகை மெய்ப்பாடுகள் கபிலர் பாடல்களில் அமைந்துள்ள தன்மையை விளக்குவதாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**

கபிலர், மெய்ப்பாடு, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை

**முன்னுரை**

பழந்தமிழரின் வாழ்க்கை முறை உணர்வு வயப்பட்டதாகும். சங்க மாந்தர்கள் தம் மனவுணர்வுகளை உடல்மொழியாக உணர்த்துவதை மரபாகக் கொண்டிருந்தனர். சங்ககால மக்களினுடைய அகம், புறம் சார்ந்த வாழ்வியலில் உணர்வு வெளிப்பாட்டு உத்திகளாகவும் மெய்ப்பாடுகள் திகழ்கின்றன. கபிலரும் தம்முடைய பாடல்களில் சங்க மாந்தர்கள் சூழலுக்குத்தக்க இன்ப, துன்ப உணர்வுகளை உடல்மொழியாகவே வெளிப்படுத்தினர் என்பதைக் காட்டியுள்ளார். அவ்வகையில் தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாட்டிற்குரிய கொள்கைகள் கபிலரின் பாடல்களில் அமைந்திருக்கின்ற தன்மையினை ஆராய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**மெய்ப்பாடு**

மனதில் தோன்றும் உள்ளத்துணர்வுகளைப் புற உறுப்புகளால் பிறருக்கு உணர்த்துவது மெய்ப்பாடு ஆகும். மெய்ப்பாடு என்பது உணர்வின் உடல் மொழியாகும். ‘மெய்ப்பாடு’ என்ற சொல்லானது ‘மெய்மை+பாடு’ எனப் பிரிந்து மெய்மை என்பது உண்மை எனவும், பாடு என்பது தோற்றம், வெளிப்பாடு எனவும் பொருள் தருகின்றது. மனதில் தோன்றும் விழுமிய உணர்ச்சிகளைப் பிறருக்குப் புலப்படுத்துவதாக அமையும் மெய்ப்பாட்டினைத் தொல்காப்பியர்,

**“உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்”**

**(தொல்.பொருள்.செய்.நூற்-505)**

என எடுத்துரைக்கின்றார். ஒரு நிகழ்வை நினைக்கும் போது அந்நிகழ்வில் அமைந்த உடலியல் அசைவுகளே நினைவுக்கு வருவதால் மெய்ப்பாடு நாடகத் தொடர்புடையது ஆகும். தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாட்டுக் களன்களும் இலக்கியத்திற்குரிய வகையில் அமைந்துள்ளன.

கண்ணினாலும் செவியினாலும் அறியப்படுகின்ற சுவைகள் எட்டாகும். அச்சுவைகள் மனக்குறிப்பினால் உடலில் தோன்றுகிற மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், உடல் நடுக்கம், உடல் வியர்த்தல், குரல் நடுக்கம் போன்றவை ஆகும். இவ்வுணர்வினால் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனும் எண்வகை மெய்ப்பாடுகள் தோன்றுகின்றன. இதனை,

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப"**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-247)**

என்ற நூற்பா உணர்த்துகிறது. இதில் **"நகை என்பது இகழ்ச்சியிற் பிறப்பது, அழுகை என்பது அவலத்திற் பிறப்பது, இளிவரல் என்பது இழிப்பிற் பிறப்பது, மருட்கை என்பது வியப்பிற் பிறப்பது, அச்சம் அஞ்சத்தகுவற்றாற் பிறப்பது, பெருமிதம் வீரத்திற் பிறப்பது, வெகுளி வெறுக்கத்தக்கனவற்றாற் பிறப்பது, உவகை சிருங்காரத்திற் பிறப்பது"** (மேலது.பக்-348) என இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார்.

**நகை**

எண்வகை மெய்ப்பாட்டினுள் முதலாவதாகத் தோன்றும் நகையுணர்வு மனதில் தோன்றும் மகிழ்ச்சியின் காரணமாக முகத்தில் வெளிப்படுவதாகும். இம்மெய்ப்பாடு குறித்து இளம்பூரணர் கூறுகையில், **"நகைபடுபொருள் கண்டதன் வழி முறுவலொடு வரும் மகிழ்ச்சிப் பொருளாமாறு நகை"** (தொல்.பொருள்.இளம்.உரை.ப-348) என்கிறார்.

தொல்காப்பியம் நகை தோன்றுவதற்குரிய நிலைக்களன்கள் குறித்துக் குறிப்பிடும் போது,

**"எள்ளல் இளமை பேதைமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்ப"**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-248)**

என எடுத்துரைக்கின்றது. ஒரு பரத்தை தெருவில் செல்வதைக் கண்ட மற்றொரு பரத்தை அவளை எள்ளி நகையாடுவதாக, **"விழவும் மூழ்த்தன்று, முழவும் தூங்கின்று"(நற்-320)** எனத் தொடங்கும் பாடலானது அமைந்திருக்கிறது.

ஊரில் திருவிழாக்கள் முடிந்து, ஓசை எழுப்பும் முழவுகள் எல்லாம் ஓசை யொழிந்து தொங்கவிடப்பட்டுள்ளன. அத்தகைய ஆரவாரமற்ற தெருவில் பரத்தை ஒருத்தி தழை ஆடை அணிந்தவளாய் நடந்து செல்லுகிறாள். இளம்பெண் இப்படிச் செல்வதைக் கண்ட ஊரார் களீரென்று சிரிக்கின்றனர். தலைவனுக்கு வேண்டிய பரத்தை ஒருத்தி இதைக் கண்டு தன்னைச் சேர்ந்தாரிடத்து மாந்தளிர் மேனியைக் கொண்ட மகளிர்களே உங்கள் தலைவன்களைக் காத்துக் காவல் செய்து சிறப்படையுங்கள் எனக் கூறுகின்றாள். ஒரு பரத்தை மற்றொரு பரத்தையை ஊரார் முன்னிலையில் எள்ளி நகையாடுதல் என்பது நகைக்குரிய எள்ளல் எனும் நிலைக் களனில் அமைவதாகும்.

**அழுகை**

அழுகை எனும் மெய்ப்பாடு அவலச்சுவை நிறைந்ததாகும். மனித மனங்கள் இன்பியல் உணர்வைக் காட்டிலும் துன்பியல் உணர்வை விரைந்து பற்றும் தன்மை கொண்டதாகும். இலக்கியங்களிலும் துன்பவுணர்ச்சியை வெளிக்காட்டும் அவலச்சுவையே மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது.அழுகை எனும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நிலைக்களன்களாக இழிவு, இழவு, அசைவு, வறுமை எனும் நான்கும் அமைகின்றன. இதனை,

**"இழிவே இழவே அசைவே வறுமையென**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே"**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-249)**

என்ற நூற்பா உணர்த்துகிறது. தலைமக்களின் ஆற்றாமையைக் கூறும் இடங்களில் அவலச் சுவையைக் கபிலர் எடுத்தாளுகின்றார். தலைவன் மீது காதல் கொண்ட தலைவி அவனைக் காணாது துயருற்றுத் தோழியிடம் வருந்தியுரைக்கின்ற போது, வேங்கை மரங்கள் நிறைந்த குன்றத்தின் மலைநாடனான தலைவனைக் காணாத துயரை என் மனமானது பொறுத்துக் கொள்கிறது. ஆனால், அத்தலைவனைக் கண்டு இன்புற்ற கண்கள் அவனைக் காணாது ஓய்வின்றிக் கண்ணீரைச் சொரிகின்றன எனக் கூறுகின்றாள். இதனை, **"யாம் எம்காமம் தாங்கவும் தாம் தம்'' (குறுந்-241)** எனத் தொடங்கும் பாடலால் அறியமுடிகிறது. பிரிவினால் வருந்தியுரைக்கின்ற தலைவியின் அவலம் நிறைந்த துன்பம் இங்கு உணர்த்தப்படுகிறது.

**இளிவரல்**

அவலச்சுவைக்குத் தொடர்புடைய மெய்ப்பாடாக இளிவரல் அமைகிறது. இளிவரல் என்ற சொல்லுக்கு இழிவினால் தோன்றுவது எனப் பொருள் கூறப் படுகிறது. இளிவரல் தோன்றும் நிலைக்களன்களாக அமைவன மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற நான்கும் ஆகும். இதனை,

**"மூப்பே பிணியே வருத்த மென்மையொடு**

**யாப்புற வந்த இளிவரல் நான்கே"**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-250)**

எனும் நூற்பாவால் அறியலாம். மூப்பு என்பது வயதின் மூப்பினால் தோன்றுவதாகும். பிணி என்ற சொல் நோயைக் குறிக்கும். உடற்காயங்கள், வியாதிகள், தழும்புகளால் தோன்றுவது பிணியாகும். வருத்தமானது உறவுகளின் வழியே ஏற்படுகின்ற விரிசல்கள் ஆகும். மென்மை என்பது நல்குரவாகும். பசி, செல்வமின்மை முதலிய காரணங்களால் தோன்றும் வறுமைநிலையே மென்மை எனும் மெய்ப்பாடாகும்.

பாரி இல்லாததால் பறம்பு மலையில் கொடுப்பாரில்லை. அம்மலையும் இப்போது மாற்றரசன் கைச்சேர்ந்தது. பறம்பு மலையும் இனித் தன்னுடைய வளத்தை இழந்து விடும் என முந்தைய நிலையை எண்ணிக் கபிலர் வருந்தியுரைப்பதாக,

**"ஒருசார் அருவி ஆர்ப்ப ஒருசார்''**

**(புறம்-115)**

எனத் தொடங்கும் பாடல் அமைகிறது. இதில் இளிவரலின் நிலைக்களனான வருத்தம் எனும் மெய்ப்பாடு அமைந்திருப்பதைக் காணலாம்.

**மருட்கை**

முன்னர் காணாத ஒன்றைப் புதிதாகக் காணும் போது ஏற்படும் வியப்பே மருட்கை எனும் மெய்ப்பாடாகும். மருட்கை எனும் மெய்ப்பாடு புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ற நிலைக்களன்களின் மூலம் தோன்றுவதாகும். இதனை,

**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**

**மதிமை சாலா மருட்கை நான்கே"**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-251)**

என்ற நூற்பாவால் உணரலாம். தலைவியைக் காண வரும் தலைமகனின் எதிர்ப்பட்டுத் தோழியானவள் பேசுகின்ற இடத்தில் மருட்கைக்குரிய மெய்ப்பாட்டின் நிலைக்களன்கள் வெளிப்படுவதைக் காணலாம். தலைவியின் நிலையைத் தலைமகனுக்கு உரைத்துத் தோழி வரைவு கடாவுகின்ற பாடலில் அமைந்த,

**"குறவர் ஊன்றிய குரம்பை புதைய**

**வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்**

**புலி செத்து வெரீஇய புகர்முக வேழம்"**

**(அகம் – 12;அடி-9-11)**

என்ற அடிகள் வியப்பினைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. குறவர்கள் வாழும் குடிசையானது வேங்கை மரத்திலிருந்து விழும் மலர்களின் குவியலால் முழுதும் மூடிவிட்டது. தூரத்திலிருந்து கண்ட யானைக்கு இக்காட்சி, படுத்திருக்கும் புலியைப்போலத் தோற்றமளித்தது. புலி அளவில் சிறிதாயினும் வலிமையுடையது. அதனால் அஞ்சி நடுங்கிய யானை அதைக் கண்டு ஓடியது. இங்கு வேங்கை மரத்தின் மலர்கள் புலியைப் போல யானைக்குத் தோற்றம் தந்தது வியப்பிற்குரிய நிகழ்வாக அமைகிறது. இது கண்டவழி வியத்தல் எனும் நிலையில் அமைந்திருக்கிறது.

**அச்சம்**

எல்லா உயிருக்கும் தோன்றும் பொதுவான உணர்ச்சியாக அச்சம் அமைகிறது. மனதில் ஏதேனும் ஒன்றன்மீது பயங்கொள்ளுதல் அச்சம் எனும் மெய்ப்பாடு தோன்றக் காரணமாக அமைகிறது எனலாம். இவ்வகை அச்சமானது பேய், பூதம் முதலிய வற்றாலும், கொடிய விலங்குகளாலும், கொலைத் தொழிலை விரும்பிச் செய்கின்ற கள்வர்களாலும், தெய்வத்தின் மீதும் தோன்றுகின்றன. இதனை,

**"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையொடு**

**பிணங்கல் சாலா அச்சம் நான்கே"**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-252)**

எனும் நூற்பாவானது சான்றுரைக்கிறது. தெய்வத்தின் மீது சூளுரைத்துத் தலைவியை விடுத்துப் பிரிந்து போன தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வரவில்லை. சூள் பொய்த்துப் போனதால் தலைவனைத் தெய்வம் தண்டித்து விடுமோ? என எண்ணித் தலைவி வருத்தம் கொள்கிறாள். இதனை,

**"மன்ற மராஅத்த பேஎம் முதிர்கடவுள் (குறுந் – 87)**

எனத் தொடங்கும் பாடலால் அறியமுடிகிறது. பொது இடத்தில் உள்ள மராமரத்தில் தங்கியுள்ளதும் அச்சமூட்டுவதுமாகிய தெய்வம் கொடியவர்களைத் தண்டிக்கும் தன்மை கொண்டது. அத்தெய்வம்

என்னைப் பசலையுற வைத்துவிட்டுக் குறித்த காலத்தில் திரும்பி வருவதாகச் சூளுரைத்துச் சென்ற தலைவன் வாராததால் அத்தலைவனை வருத்துமோ? என அஞ்சித் தலைவி துயர்கொள்கிறாள். இங்குத் தெய்வம் தண்டிக்கும் எனக் கூறித் தலைவி அச்சம் கொள்வதிலிருந்து இப்பாடலில் அமைந்த அச்சத்திற்குரிய நிலைக்களன் ‘இறை’ என்பது புலப்படுகிறது.

**பெருமிதம்**

பெருமிதம் எனும் மெய்ப்பாடு பிறவற்றுடன் ஒப்பிட்டுக் கூறமுடியாத அளவிற்கு மேம்பட்டதாய் விளங்கும் இடத்தில் தோன்றுவதாகும். இம்மெய்ப்பாடு கல்வி, வீரம், புகழ், கொடை என்ற நான்கினையும் நிலைக்களனாகக் கொண்டதாகும். இதை,

**“கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே”**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-253)**

என்ற நூற்பா விளக்குகிறது. பாரியின் வள்ளல் தன்மையைக் கபிலர் குறிப்பிடுகையில் தன்னை நாடி வரும் இரவலருக்கு வறியாது கொடுக்கும் தன்மை கொண்டவனாக விளங்குகிறான் எனக் கூறுகிறார். மலர்களில் நல்ல நறுமணம் உடைய மலர்களும் உண்டு. நறுமணம் அற்ற மலர்களும் உண்டு. அந்த இருவகையிலும் சேராமல் கொத்தாகக் குவிந்த மலராக விளங்குவது எருக்கமலர் ஆகும். அவ்வெருக்கமலரைத் தெய்வத்திற்கு எடுத்துச் சென்று சூட்டும் போது அத்தெய்வம் “இம்மலரை யான் ஏற்கேன்” என ஒதுக்காது. அதுபோல, பாரியும் தன்னை நாடி வருகின்ற இரவலர்கள் அறிவற்றவர்களாக இருப்பினும், ஒழுக்க நிலையில் தாழ்ந்தவர்களாக இருப்பினும் அவர்களின் சொற்களையும் கேட்டு, தன் வள்ளன்மையால் செல்வத்தை வழங்குவதைக் கடமையாகக் கொண்டவனாவான். இதனை,

**“நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்**
**புல் இலை எருக்கம் ஆயினும் உடையவை**
**கடவுள் பேணேம் என்னா ஆங்கு**
**மடவர் மெல்லியர் செல்லினும்**
**கடவன் பாரி கை வண்மையே”**

**(புறம் – 106)**

என்ற பாடலினால் உணரமுடிகிறது. பாரி இரவலருக்கு வழங்கும் கொடைத் தன்மை மிக்கவன் எனக் கபிலர் கூறுவதின் மூலம் பெருமிதச்சுவைக்குரிய புகழ் எனும் மெய்ப்பாடு தோன்றுவது ஆய்வில் அறியப்பட்டது.

**வெகுளி**

வெகுளி என்பது கடுங்கோபம் ஆகும். மனதில் உருவாகின்ற மிகையுணர்வின் பெருக்கே கோபமாக வெளிப்படுகிறது. அக்கோபம் தன்நிலை மீறி வெளிப்படுமாயின் அது தனக்கும் பிறருக்கும் துன்பத்தையே தருகின்றது. இக்கோபம் நான்கு நிலைகளில் தோன்றும் என்பதைத் தொல்காப்பியம்,

**“உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே”**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-254)**

என்ற நூற்பாவில் எடுத்துரைக்கின்றது. செல்வக் கடுங்கோ வாழியாதனின் மறவலிமையைக் கபிலர் புகழ்ந்து பாடும்போது,

**"எறிபிணம் இடறிய செம்மறுக் குளம்பின்**
**பரியுடைய நல்மா விரிஉளை சூட்டி,**
**மலைத்த தெவ்வர் மறம்தபக் கடந்த"**

**(பதிற் – 5; அடி – 1- 3)**

எனக் குறிப்பிடுகின்றார். கடுங்கோ போர்க்களத்தில் கடும்போர் புரிந்ததால் அவனை எதிர்த்த பகைநாட்டு வீரர்களின் உடல்கள் வெட்டப்பட்டுப் போர்க்களம் எங்கும் காணப்படுகின்றன. வெட்டப்பட்ட அவ்வுடல்களைத் தம் குருதி படிந்த குளம்புகளால் விரைந்து செல்லும் குதிரைகள் தாண்டிச் செல்கின்றன எனக் கபிலர் பாடுகின்றார். பகைவர் நாட்டு மறவர்களின் உறுப்புகள் குறைக்கப்பட்ட செய்தி இடம்பெற்றுள்ள இப்பாடலிலும் வெகுளிக்குரிய உறுப்பறை எனும் நிலைக்களன் அமைந்திருப்பதைக் காணலாம்.

**உவகை**

அகத்தில் தோன்றும் மகிழ்ச்சிக்கு உண்டான விழுமிய உணர்வே உவகை ஆகும். உவகை என்பது இன்பத்தின் பயனாய்த் தோன்றுவதாகும். இம்மெய்ப் பாட்டைத் தொல்காப்பியம்,

**"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென**
**அல்லல் நீத்த உவகை நான்கே"**

**(தொல்.பொருள்.மெய்.நூற்-255)**

என்ற நூற்பாவில் எடுத்துரைக்கிறது. தலைவியோடு களவொழுக்கத்தில் கூடி மகிழ்ந்த தலைவன், அக்களவிலிருந்து நீங்கித் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள எண்ணுகிறான். தோழி கூறிய வரைவுக்குரிய செய்தி தலைவியின் மனத்திற்கு இன்பத்தை அளித்தது. இதனை ஐங்குறுநூற்றில் அமைந்த,

**"அன்னாய், வாழி! வேண்டு அன்னை! நம் ஊர்ப்**
**பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்**
**குடுமித் தலைய மன்ற**
**நெடு மலை நாடன் ஊர்ந்த மாவே"**

**(ஐங் – 202)**

என்ற பாடலானது விளக்குகிறது. இங்கு உவகைக்குரிய நிலைக்களனானப் புணர்வு என்பது இடம்பெற்றிருப்பது அறியப்படுகின்றது.

**முடிவுரை**

மெய்ப்பாடு என்பது உணர்வின் உடல் மொழியாகும். மனத்தில் தோன்றும் உணர்வுகளைப் புற உறுப்புகளால் பிறருக்கு உணர்த்துவது மெய்ப்பாட்டின் இயல்பாக அமைகின்றது. அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானவையாக அமையும் மெய்ப்பாடு எண்வகையாக அமைகிறது. எண்வகை மெய்ப்பாடு என்பது நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி என்பதாகும். கபிலர் தலைவன் தலைவியின் உள்ளக்குறிப்பை விளக்கும் இடங்களில் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டின் வகைகளை எடுத்தாண்டுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம் – பொருளதிகாரம்,சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2005.

சாமிநாதையர்,உ.வே - குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம்,சென்னை – 1978.

சுப்பிரமணியன்,ச.வே.(பதி) - சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் (நற்றிணை),மணிவாசகர் பதிப்பகம், சென்னை , முதற்பதிப்பு-2010.

துரைசாமிப்பிள்ளை,ஔவை.(உரை) – ஐங்குறுநூறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,சிதம்பரம், முதற்பதிப்பு - 1957.

துரைசாமிப்பிள்ளை,ஔவை.(உரை) – பதிற்றுப்பத்து, கழக வெளியீடு,சென்னை, முதற்பதிப்பு - 1973

துரைசாமிப்பிள்ளை,ஔவை.(உரை) - புறநானூறு,கழக வெளியீடு,சென்னை, முதற்பதிப்பு – 1970.

பேராசிரியர் (உரை) -தொல்காப்பியம் – பொருளதிகாரம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2003.

வேங்கடசாமிநாட்டார்,ந.மு. (உரை) -அகநானூறு, கழக வெளியீடு, சென்னை,
முதற்பதிப்பு - 2007.